ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2127/29 - 2019 ජූනි මස 14 වැනි සිකුරාදා - 2019.06.14

*2127/29 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(2அ) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபை அரசாங்க சேவையின் அதிகாரங்கள் கையளிக்கப்படல் தொடர்பான ஆணை*

*அதிகாரங்களை அமுல்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதிய 2082/7 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2018.06.26 ஆந் திகதிய கட்டளைச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எவ்வித பாரபட்சமும் இல்லாமல் 1987 ஆம் ஆண்டின் மாகாண சபைச் சட்டத்தின் 42(2அ) ஆம் இலக்க உட்பிரிவில் (திருத்தப்பட்ட) சட்டத்தின் கீழ், மேல் மாகாண பொதுச் சேவையின் உத்தியோகத்தர்களின் இடமாற்றம், பதவி உயர்வு, பதவி நீக்கம் மற்றும் ஒழுக்காற்று கட்டுப்பாடுகள் 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, ஒழுங்கு அட்டவணை இல. 01 ஐ அகற்றுவதன் மூலம் திருத்தப்பட்டு, 2019.05.16 ஆந் திகதி முதல் இல. 01 என கீழே வரையறுக்கப்பட்ட அட்டவணையில் மாற்றுவதன் மூலம் திருத்தப்படும்.*

சுனில் அபேயவர்தன,<br>
தலைவர்,<br>
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,<br>
மேல் மாகாணம்.

மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,<br>
இல. 109, பிரதான வீதி,<br>
பத்தரமுல்ல,<br>
2019, மே 16.

**அட்டவணை**

| நிரல் I<br>அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள் | நிரல் II<br>உத்தியோகத்தர்களின் பிரிவு | நிரல் III<br>அளிக்கப்பட்ட அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. பிரதம செயலாளர் | (I) நாடளாவிய சேவைக்குரிய உத்தியோகத் தர்கள்<br>i. இலங்கை நிர்வாக சேவை<br>ii. இலங்கை எந்திரி சேவை<br>iii. இலங்கை விஞ்ஞான சேவை<br>iv. இலங்கை கட்டிட நிர்மாண சேவை<br>v. இலங்கை கணக்காளர் சேவை<br>vi. இலங்கை திட்டமிடல் சேவை<br>vii. இலங்கை கல்வி நிர்வாக சேவை<br>viii. இலங்கை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார சேவை<br>ix. இலங்கை வைத்திய சேவை<br>x. இலங்கை சுதேச வைத்திய சேவை<br>xi. இலங்கை அளவையாளர் சேவை<br>xii. இலங்கை விவசாய சேவை | (அ) மேல் மாகாணப் பொதுச்சேவைக்கு நியமனம்<br>(ஆ) மேல் மாகாணத்தில் அமைச்சு, திணைக்களம் மற்றும் நிறுவனங் களுக்கு நிலைப்படுத்தல்<br>(இ) மேல் மாகாணத்தில் அமைச்சு, திணைக்களம் மற்றும் நிறுவனங் களுக்கு இடையே இடமாற்றம் செய்தல்<br>(ஈ) மேல் மாகாண அரசாங்க சேவையிருந்து விடுவித்தல் |
| | (II) நாடளாவிய சேவைக்குரிய உத்தியோகத் தர்கள் (கல்வி நிர்வாக சேவை உத்தியோ கத்தர்கள் தவிர்ந்த) | (அ) ஒழுக்கக் கட்டுப்பாடு (அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகளுக்கு கீழமைந்த)* |
| | (III) மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நியமன அதிகாரியாகவுள்ள:-<br>(i) SL சம்பளத்தொகுதியை உடைய உத்தியோகத்தர்கள் (உள்ளூராட்சி நிறுவனங்களோடு மட்டுப்படுத்தப்பட்ட SL சம்பளத் தொகுதியை உடைய உத்தியோகத் தர்கள் தவிர்ந்த) | (அ) அமைச்சுக்கள்/திணைக்களங்கள்/ நிறுவனங்களிடையே இடமாற்றம் செய்தல்<br>(ஆ) சேவையிலிருந்து நீக்குதல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு |
| | (IV) மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழு நியமன அதிகாரியாகவுள்ள பொ.நி.சு. 06/2006 சுற்றறிக்கைக்கமைய மூன்றாம், இரண்டாம் நிலைக்குரிய உத்தியோகத் தர்கள் :-<br>(i) SL வகுப்பினைச் சாராத உத்தியோ கத்தர்கள் | (அ) பிரதம செயலாளர் அலுவலகம் மற்றும் பிரதம செயலாளர் அலுவலகத் துடன் இணைந்த நிறுவனங்களிடையே இடமாற்றம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு<br>(ஆ) அமைச்சுக்கள்/திணைக்களங்கள்/ நிறுவனங்களிடையே இடமாற்றம் செய்தல் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*அதிகாரமளிக்கப்பட்ட பதவிகள்* | *நிரல் II*<br>*உத்தியோகத்தர்களின் பிரிவு* | *நிரல் III*<br>*அளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
|---|---|---|
| | (V) பொ.நி.சு.06/2006 சுற்றறிக்கைக்கமைய MT-1, MN-1மற்றும் PL வகுப்பினை சார்ந்த உத்தியோகத்தர்கள் | (அ) பிரதம செயலாளர் அலுவலகம் மற்றும் பிரதம செயலாளர் அலுவலகத் துடன் இணைந்த நிறுவனங்களிடையே பதவிகளுக்கு நியமித்தல், இடமாற்றம், பணிநீக்கம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு.<br>(ஆ) உள்ளூராட்சி நிறுவனங்கள் தவிர்ந்த அமைச்சுக்கள்/திணைக்களங்கள் இடையே இடமாற்றங்கள் மேற் கொள்ளல்.<br>(இ) சிற்றூழியர்களின் மாகாணங்களுக் கிடையிலான இணைப்பு/விடுவித்தல் என்பன. |

* **குறிப்பு**.- "அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஒழுங்குகளின் கீழ்" என்பது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் விதிக்கப்படக்கூடிய ஒழுங்குவிதிகளின் கீழ் செயற்படுதல் எனும் பொருளைக் கொண்டிருக்கும்.

*06-706*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.